பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 150 நாள்:31.10.2017

**பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலை பணியின் விவரங்களை பொதுமக்கள் இணையதளத்தில் பார்க்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து சாலைகளில் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகளின் விபரங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தின் வாயிலாக பொதுமக்கள் பார்க்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து சாலைகளில் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளின் விபரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் இணைய தள வசதி 07.03.2015 அன்று துவங்கப்பட்டது. துவங்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை அன்றாட பணிகளின் விபரங்கள் இணைய தளத்தில் ஒளிமறைவு இல்லாமல் வெளியிடப்பட்டு இருக்கின்றது. தற்சமயம் ஏற்பட்ட தொழிற்நுட்ப கோளாறுகள் தகுந்த தொழிற்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு 48 மணி நேரத்திற்குள் சரி செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இத்தகவல்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணைய தளத்தில் நடைமுறையில் உள்ளது இதனை பொதுமக்கள் அனைவரும் பார்த்து அறிந்துகொள்ளலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி